**இடைநிலை மதிப்பெண் சான்றிதழில் திருத்தம் மேற்கொள்வது சார்ந்த வழிகாட்டு நெறிமுறைகள் பின்வருமாறு:**

பத்தாம் வகுப்பு அசல் மதிப்பெண் சான்றிதழில் **பெயர் / தலைப்பெழுத்து / தந்தை பெயர்/ தாயார் பெயர் மற்றும் பிறந்த தேதி** திருத்தம் சார்ந்து நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக, பின்வரும் ஆவணங்களை எவ்வித திருத்தமுமின்றி,. 10–ம் வகுப்பு பயின்ற பள்ளித் தலைமையாசிரியரின் சான்றொப்பத்துடன் (Attestation) **சம்மந்தப்பட்ட** மாவட்ட **முதன்மை கல்வி அலுவலர்** வாயிலாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைத்திட வேண்டும்.

i. அசல் மதிப்பெண் சான்றிதழ் மற்றும் அதன் நகல் (Mark Statement). (If laminated, lamination Must be removed)

ii. 10–ஆம் வகுப்பு பள்ளி மாற்றுச் சான்றிதழில் தலைமையாசிரியரின் சான்றொப்பமிட்ட நகல் (எவ்வித திருத்தமும் இருத்தல் கூடாது).

iii. 1–ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான பள்ளி பதிவுத்தாள் (Record Sheet) / பள்ளி மாற்றுச்சான்றிதழ் (Transfer certificate) அசல் அல்லது தலைமையாசிரியரால் சான்றொப்பமிட்ட அதன் நகல். மேலும், பதிவுத்தாள் (Record Sheet)/ பள்ளி சான்றிதழில் (Transfer certificate) எவ்வித திருத்தமும் இருத்தல் கூடாது.

iv. 10–ஆம் வகுப்பு பயின்ற பள்ளியின் தலைமையாசிரியரால் சான்றொப்பமிட்ட படிப்பு சான்றிதழ் (bonafide certificate)

v. பள்ளிச் சேர்க்கை விண்ணப்பம் (Admission Form) தலைமையாசிரியரின் சான்றொப்பமிட்ட நகல்.

vi. எஸ்.எஸ்.எல்.சி. உறுதி மொழிப் படிவம் (SSLC Declaration Form) தலைமையாசிரியரால் சான்றொப்பமிட்டது..

vii. பள்ளி சேர்க்கை/ நீக்கல் பதிவேட்டில் மாணவரின் பெயர் உள்ள முழுமையான பக்கத்தின் நகல் தலைமையாசியரால் சான்றொப்பமிட்டது.

viii. தேர்வரின் பெயர்/ தந்தை பெயர்/ தாயார் பெயர்/ முகப்பெழுத்து/ பிறந்ததேதி ஆகியவை பதிவு செய்யும் பொழுது எவ்வாறு தவறு ஏற்பட்டது என்பதற்கான தலைமையாசிரியரின் விளக்கக் கடிதம்.

**ix.** பத்தாம் வகுப்பு தேர்வு எழுதுவதற்கு முன்னர் தமிழ்நாடு அரசிதழில் (TN GAZETTE) பெயர் மாற்றம் செய்திருந்தால் மட்டுமே பத்தாம் வகுப்பு அசல் மதிப்பெண் சான்றிதழில் பெயர் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இடைநிலை பொதுத்தேர்வு எழுதி மதிப்பெண் சான்றிதழ் பெறப்பட்ட பிறகு அரசிதழில் மாற்றம் செய்யப்படும் பெயர் மாற்றம் மதிப்பெண் **சான்றிதழில்** திருத்தம் செய்து வழங்க இயலாது.

x. அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரிபவரெனில் பணிபுரியும் அலுவலகம் மூலமாக அனுப்ப வேண்டும்.